டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 8.03.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 214 - Madurai | Online Edition

# வேளாண்மை மற்றும் கிராமப்புற மாற்றம் குறித்த பட்ஜெட்டுக்குப் பிந்தைய இணையவழிக் கருத்தரங்கு

## பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார்

புது தில்லி, மார்ச் 7

வேளாண்மை மற்றும் கிராமப்புற மாற்றம் குறித்த பட்ஜெட்டுக்குப் பிந்தைய இணையவழிக் கருத்தரங்கில் பிரதமர் நரேந்திர மோடி வெள்ளிக்கிழமை உரையாற்றினார். ஏற்கனவே நடைபெற்ற தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார வளர்ச்சித் தொடர்பான அமர்வுகள் பற்றி குறிப்பிட்ட பிரதமர், பட்ஜெட் உருவாக்கத்தின் போது பங்குதாரர்கள் மதிப்புமிகு ஒத்துழைப்பை அளித்ததாகக் கூறினார். தற்போது பட்ஜெட்டுக்கு பின் அதன் உண்மையான பயன்களை நாடு அனுபவம் கொள்வது அதே அளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் பங்கேற்பாளர்களின் ஆலோசனைகள் முக்கியமானது என்றும் மோடி கூறினார்.

இந்தியப் பொருளாதாரத்தின் முக்கியப் பகுதியாக வேளாண்மை, இப்போதும் உள்ளது என்பதை எடுத்துரைத்த பிரதமர், நாட்டின் நீண்டகால வளர்ச்சிப் பயணத்தில் முக்கிய தூணாக அது விளங்குகிறது என்றார். பிரதமரின் விவசாயிகள் கௌரவ நிதி, குறைந்தபட்ச ஆதரவு விலை போன்ற பல திட்டங்களும் சீர்திருத்தங்களும் விவசாயிகளுக்கு ஒன்றரை மடங்கு வருவாய் கிடைப்பதை உறுதி செய்துள்ளன என்று மோடி கூறினார்.

தற்போதுள்ள திட்டங்களின் வெற்றி குறித்து விவரித்த பிரதமர், பிரதமரின் விவசாயி கௌரவிப்பு நிதியாக 10 கோடி விவ சாயிகள், 4 லட்சம் கோடி ரூபாய் நிதியுதவி பெற்றிருப்பதாக

கூறினார். பிரதமரின் பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தின்படி, காப்பீட்டு உரிமை கோரல்களுக்கு சுமார் 2 லட்சம் கோடி ரூபாய் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த இணையவழிக் கருத்தரங்கில் உங்களின் விவாதமும் ஆலோசனைகளும் பட்ஜெட் அம்சங்களை கள அளவில் விரைவாக அமலாக்க உதவும் என்று மோடி நம்பிக்கைத் தெரிவித்தார்.

மீன்வளத்துறை பற்றி குறிப்பிட்ட பிரதமர், உலகின் இரண்டாவது பெரிய மீன் உற்பத்தியாளராக இந்தியா விளங்குகிறது என்றார். தற்போது நாட்டின் பல்வேறு ஏரிகள் மற்றும் குளங்களில் சுமார் 4.5 லட்சம் டன் மீன் உற்பத்தி செய்யப்படுவதாகவும் மேலும், 20 லட்சம் டன் உற்பத்தி செய்வதற்கான திறன் இந்தியாவில் உள்ளதென்றும் அவர் கூறினார்.

உலகின் மிகப் பெரிய பால் உற்பத்தியாளராக உள்ள இந்தியா, முட்டை உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ளது என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார். இதனை மேலும் அதிகரிக்க தரமான கருத்தரிப்பு, நோய்த் தடுப்பு, அறிவியல் பூர்வ நிர்வாகம் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். கால்நடைகளின் சுகாதாரம் முக்கியமானது என்பதை வலியுறுத்திய மோடி, ஒரே பூமி, ஒரே சுகாதாரம் என்று நான் பேசுவது கால்நடைகளின் சுகாதாரத்தை உள்ளடக்கியது தான் என்று குறிப்பிட்டார்.

தடுப்பூசி உற்பத்தியில் இந்தியாவின் தற்சார்பு பற்றி எடுத் துரைத்த பிரதமர், தேசிய கோகுல் இயக்கத்தின் கீழ், தொழில் நுட்ப விரிவாக்கம் செய்யப்படுவதாகவும் கால்நடை பராமரிப்பு விவசாயிகளுக்கு வேளாண் கடன் அட்டைகள் வழங்கப்படு வதாகவும் கூறினார்.

கால்நடைகளை கால்கள் மற்றும் வாய்ப்பகுதி நோய் களிலிருந்து பாதுகாக்க 125 கோடி டோஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இந்தத் துறையில் தனியார் முதலீட்டை ஊக்குவிக்க கால்நடை பராமரிப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியம் தொடங்கப்பட்டிருப்பதாகவும் பிரதமர் கூறினார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

பிரதமரின் வீட்டு வசதித் திட்டம், பிரதமரின் கிராமச்சாலைகள் திட்டம் போன்றவற்றின் மூலம் கிராமப்புற வளத்தை அதிகரிக்க அரசு உறுதிபூண்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். ஊரக பொருளாதாரத்தில் சுயஉதவிக்குழுக்களின் தாக்கம் பற்றி கூறிய மோடி, 2029-க்குள் 3 கோடி பெண் தொழில் முனைவோரை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இது போன்ற இலக்குகளை விரைவாக எட்டுவதற்கு உங்களின் ஆலோசனைகள் குறிப்பிடத்தக்கவையாக இருக்கும் என பிரதமர் கூறினார்.

# வெண்டைக்காய் விதை நேர்த்தி குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவி



திண்டுக்கல், மார்ச் 7

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டாரத்தில் வெண்டைக்காய் சாகுபடியில் அதிக மகசூல் பெறுவதற்காக விதை நேர்த்தியின் முக்கியத் துவம் குறித்து விவசாயி களுக்கு விழிப்புணர்வு அளிக்கப் பட்டது. இந்த விழிப் புணர்வு நிகழ்ச்சி வேளாண் மாணவி அபிராமியால் நடத்தப் பட்டது.

விவசாயிகளுக்கு விதை நேர்த்தியின் அவசியம் மற்றும் அதன் பயன்கள் குறித்து விளக்கப்பட்டது. விதைப்பதற்கு முன் வெண்டைக்காய் விதைகளை Trichoderma viride 4 கிராம் / கிலோ விதை அல்லது Pseudomonas fluorescens 10 கிராம் / கிலோ விதை என்றளவில் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும் என்று கூறப்பட்டது. விதைகளை மருந்துடன் நன்றாக கலக்கி சுமார் 30 நிமிடங்கள் நிழலில் உலர்த்தி பின்னர் விதைத்தால் நல்ல முளைவும் ஆரோக்கியமான செடி வளர்ச்சியும் கிடைக்கும்.

இந்த முறையை பின்பற்றுவதன் மூலம் விதை மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்தி, அதிக மகசூல் பெற முடியும் என விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# இந்தியாவுக்கான பசுமை அமோனியா மற்றும் பசுமை மெத்தனால் தரநிலைகளை அரசு அறிவித்துள்ளது

புது தில்லி, மார்ச் 7

தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கத்தை மேம்படுத்தும் வகையில், மத்திய அரசு பசுமை அமோனியா மற்றும் பசுமை மெத்தனால் தயாரிப்புக்கான புதிய தரநிலைகளை அறிவித்து உள்ளது. இந்த அறிவிப்பு 27.02.26 அன்று வெளியிடப்பட்டது. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் இதை வெளியிட்டுள்ளது.

அமோனியா மற்றும் மெத்தனால் "பசுமை" தயாரிப்பாக கருதப்பட வேண்டுமெனில் பூர்த்தி செய்ய வேண்டிய வாயு வெளியீட்டு வரம்புகள் மற்றும் விதிமுறைகளை இந்தத் தரநிலைகள் குறிப்பிடுகின்றன. இவை புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் இருந்து பெறப்படும் பசுமை ஹைட்ரஜனை பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும்.

### பசுமை அமோனியா தரநிலை

பசுமை அமோனியா தயாரிப்பில் ஏற்படும் மொத்த பசுமைக் குடில் வாயு வெளியீடு ஒரு கிலோ அமோனியாவுக்கு 0.38 கிலோ கார்பன் டை ஆக்சைடு சமமதிப்பை மீறக்கூடாது. இந்த மதிப்பு கடந்த 12 மாத சராசரியை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும்.

### பசுமை மெத்தனால் தரநிலை

பசுமை மெத்தனால் தயாரிப்பில் ஏற்படும் மொத்த பசுமைக் குடில் வாயு வெளியீடு ஒரு கிலோ மெத்தனாலுக்கு 0.44 கிலோ கார்பன் டை ஆக்சைடு சமமதிப்பை மீறக்கூடாது. இதுவும் 12 மாத சராசரியாக கணக்கிடப்படும்.

பசுமை மெத்தனால் தயாரிக்க தேவையான கார்பன் டைஆக்சைடு, உயிரியல் மூலங்கள் அல்லது ஏற்கனவே உள்ள தொழில்துறை மூலங்களிலிருந்து பெறலாம். இந்த மூலங்களை அமைச்சகம் தேவைக்கேற்ப மாற்றலாம்.

அளவீடு, கண்காணிப்பு, அறிக்கை தயாரித்தல் மற்றும் சான்றிதழ் வழங்குதல் தொடர்பான விரிவான வழிமுறைகள் பின்னர் தனியாக வெளியிடப்படும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த அறிவிப்பிற்கு முன்பு வெளியிடப்பட்ட டெண்டர்கள், அவை வெளியிடப்பட்ட காலத்தில் இருந்த விதிமுறைகளின் அடிப்படையில் தொடரும். ஆனால் தேவையான இடங்களில், இரு தரப்பினரின் ஒப்புதலுடன் புதிய விதிகளுடன் பொருந்திப் போகலாம்.

இந்தப் புதிய தரநிலைகள் உரத் துறை, கப்பல் போக்குவரத்து, மின்சாரம் மற்றும் கனரகத் தொழில்கள் போன்ற துறைகளில் கார்பன் வெளியீட்டை குறைக்க உதவும் என்று அரசு தெரிவித்து உள்ளது. மேலும், பசுமை எரிபொருள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் இந்தியாவின் நிலையை வலுப்படுத்தும் என்றும் கூறப்பட்டுள்ளது.

# ஊரக வேளாண்மை பணி அனுபவ துவக்க விழா



திருச்சி, மார்ச் 7

திருச்சி மாவட்டம், தனலெட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக இறுதி ஆண்டு மாணவர்களின் ஊரக வேளாண்மை பணி அனுபவ துவக்க விழா, அந்தநல்லூரில் உள்ள சமுதாயக் கூடத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் வேளாண்மை உதவி இயக்குநர் உாராணி கலந்து கொண்டு தலைமை வகித்தார். மேலும் ஆத்மா பணியாளர் சௌந்தரியா கலந்து கொண்டு மாணவர்களக்கு விவசாயம் பற்றிய பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறினர். ஊரக வேளாண்மை பணி அனுபவ குழு பேராசிரியர் கோகுல் மற்றும் பல விவசாயிகள் கலந்துக் கொண்டு மாணவர்களுக்கு தேவையான பல்வேறு கருத்துக்களை வழங்கினர். இவ்விழாவில் குழுத்தலைவர் செ.ஆறுமுகசாமி வரவேற்புரை வழங்க, ஆகாஷ்.பா நன்றியுரை வழங்கினார். மேலும் குழு மாணவர்கள் ஆகாஷ்.மு, அரிஞ்சய சோழன்.கு, அதிஷ்.ம, பாலாஜி.சி, மற்றும் குருப்பிரசாத்.வே அனைவரும் விவசாயிகளுக்கு தேநீர், இனிப்பு வழங்கப்பட்டு விழா இனிதே நிறைவடைந்தது.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# மசாலா பொடிகள் மற்றும் ஊறுகாய்கள் தயாரிப்பு பயிற்சி

கோயம்புத்தூர், மார்ச் 7

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மசாலா பொடிகள் மற்றும் ஊறுகாய்கள் தயாரிப்பு பயிற்சி 10.03.26 மற்றும் 11.03.26 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும். கீழ்கண்ட உணவு பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படும்.

- மசாலா பொடிகள் (சாம்பார் பொடி, ரசப்பொடி, கறிமசால் பொடி, பருப்பு பொடி, சிக்கன் 65 மசாலாபொடி)
- தயார் நிலை பேஸ்ட்
- காளான் ஊறுகாய்
- வாழைப்பூ ஊறுகாய்
- பாகற்காய் ஊறுகாய்
- கத்தரிக்காய் ஊறுகாய்
- வெங்காய ஊறுகாய்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1,500 + GST 18%) பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும். (ரொக்கம் இல்லை, GPAY மட்டும்).

பயிற்சியானது அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, மருதமலை சாலை வழி) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூரில் நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி எண் : 94885 18268, 0422 6611340, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

# கறவை மாடுகளின் பராமரிப்பும் சுகாதாரமான பால் உற்பத்தியும் – ஒரு பார்வை

**பால் உற்பத்தியில் இந்தியாவின் நிலை**

உலகளவில் வருடத்திற்கு 992 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் நம் நாட்டில் மட்டும் ஆண்டிற்கு 247.87 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்யப்பட்டு, பால் உற்பத்தியில் உலகளவில் முதலிடத்தில் உள்ளோம்.



நம் தமிழ்நாடு ஆண்டிற்கு 11.44 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்து, நாட்டில் பதினொன்றாவது இடத்தில் உள்ளது. 38.82 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்து, உத்திரபிரதேச மாநிலம் முதலிடத்தில் உள்ளது.

நம் நாட்டில், சராசரியாக ஒரு தனிமனிதனுக்கு ஒரு நாளுக்கு 485 கிராம் பால் கிடைக்கின்றது. இந்த தனிநபர் அளவானது பஞ்சாபில் அதிகபட்சமாக 1245 கிராமாகவும், நம் தமிழகத்தில் 384 கிராமாகவும் உள்ளது.

நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பாலில், 98 சதவீதம் கிராமப் புறங்களிலிருந்தும், 2 சதவீதம் நகர்ப்புறங்களி லிருந்தும் கிடைக்கிறது. மொத்த பால் உற்பத்தியில பசும்பாலின் பங்களிப்பு 54 சதவீதமாகவும், எருமைப்பாலின் பங்களிப்பு 43 சதவீதமாகவும், வெள்ளாட்டு பாலின் பங்களிப்பு 3 சதவீத மாகவும் உள்ளது.

உற்பத்தி செய்யப்படும் மொத்த பாலில் 50 சதவீதம், நாம் தினந்தோறும் அருந்துவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. எஞ்சி உள்ள 50 சதவீதம் பாலிலிருந்து, பால்பொருள்கள் தயாரிக் கப்படுகிறது. இதில் நெய் உற்பத்தி செய்ய 33 சதவீதமும், தயிர் உற்பத்தி செய்ய 7 சதவீதமும், பால்கோவா உற்பத்தி செய்ய 7 சதவீதமும், பனீர் உற்பத்தி செய்ய 3 சதவீத பாலும் பயன் படுத்தப்படுகிறது. இந்தியாவில் பால் சார்ந்த தொழில்கள் மூலம் ஆண்டிற்கு 11,16,241 கோடியளவிற்கு வர்த்தகம் நடை பெறுகிறது.

**சுகாதாரமான பால் உற்பத்தியின் அவசியம்**

பால் ஒரு சமச்சீர் உணவாகும். பாலிலுள்ள ஊட்டச்சத்துக்கள், நுண்கிருமிகள் வளர சாதகமாக உள்ளது. பாலில் சேரும் கிருமிகள் பன்மடங்காகப் பெருகி பாலின் தரத்தை குறைத்து விடும். அதனால் நீண்ட நேரம் பாலை சேமித்து வைக்க முடியாமல் போகிறது.

பொதுவாக, கறந்த பால் அதிகபட்சமாக 6 மணி நேரம் வரை நன்றாக இருக்கும். $4^0$செ.இல் குளிர்விக்கப்பட்ட பாலை 24 மணி நேரமும், பதப்படுத்தப்பட்ட பாலை குளிர்வித்து 1 வாரம் வரையிலும் சேமித்து வைக்கலாம். அதன்பிறகு, நுண்கிருமிகள் பெருக்கமடைந்து பாலை பயன்படுத்த முடியாமல் போகிறது.

மேலும் நோயுற்ற கறவை மாடுகள் மற்றும் பால் கறப்பவர் மூலம், நுண்கிருமிகள் பாலில் கலந்து, அதை பருகுவதன் மூலம் மனிதர்களுக்கு காசநோய், டிப்தீரியா, வயிற்றுப்போக்கு, டைபாய்டு போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. அதுபோன்று, நோயுற்ற பால் கறவையாளர் மூலம் கால்நடைகளுக்கும் நோய் பரவ வாய்ப்புள்ளது. எனவே சுகாதாரமான பால் உற்பத்தி முறைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

**தூய்மையான பால் உற்பத்தி செய்ய பண்ணைகளில் நாம் கடைபிடிக்க வேண்டிய சுகாதாரமான வழிமுறைகள் :**

- கறவை மாடுகளின் சுகாதாரம்
- பால் கறப்பவர்களின் சுகாதாரம்
- பால் பாத்திரங்களின் சுத்தம்
- சுகாதாரமான பால் கறக்கும் முறைகள்
- சுற்றுப்புற சுகாதாரம்

போன்ற நடவடிக்கைகளை கடைபிடிப்பதன் மூலம் நாம் தூய்மையான பாலை உற்பத்தி செய்யலாம்.

**கறவை மாடுகளின் சுகாதாரம்**

கறவை மாடுகள், நோயற்றவையாக இருக்க வேண்டும். குறிப்பாக காசநோய், கருச்சிதைவு நோய், கோமாரி நோய், மடிவீக்க நோய் தாக்கம் இருக்கக்கூடாது. ஏனெனில், இந்நோயை உண்டாக்கும் நுண்கிருமிகள், மனிதர்களையும் தாக்கும்.

எனவே கறவை மாடுகளுக்கு, நோய்த் தாக்கம் வருவதற்கு முன்னரே உரிய காலத்தில் தடுப்பூசியும், மடிநோய்க்கு முறையான சிசிக்சையும் மேற்கொள்வது அவசியமாகிறது. மாடுகளின் உடலிலிருந்தும், அசுத்தங்கள் பாலில் கலக்க வாய்ப்புள்ளது. குறிப்பாக உரோமம், சாணம், வைக்கோலுடன் கிருமிகளும் பாலில் சேர்ந்துவிடும். எனவே மாடுகளை தினமும் சுத்தமாக கழுவ வேண்டும். குறிப்பாக பால் கறப்பதற்கு முன், மடியையும், பக்கவாட்டு தொடை பாகங்களையும், பொட்டாசியம் பர்மாங்கனேட் கலந்த தண்ணீரால் கழுவி, சுத்தமான உலர்ந்த துணியால் துடைக்க வேண்டும்.

### பால் கறவையாளரின் சுகாதாரம்

பால் கறப்பவர் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். குறிப்பாக, காசநோய், டைபாய்டு, டிப்தீரியா, காலரா, தொண்டைப்புண் போன்ற ஏதேனும் நோயினால் பாதிக்கப்பட்டு அத்தகைய நபர் பால் கறக்கும்போது தும்மினாலும், இருமினாலும் அவரிட மிருந்து நுண்கிருமிகள் பாலில் கலக்க வாய்ப்புள்ளது. பால் கறப்பவர் சுத்தமான ஆடைகள் அணியவேண்டும். விரல் நகங்கள் நீண்டிருந் தால் அதில் நுண்கிருமிகள் சேர்ந்து பாலை அசுத்தமாக்கும்.

மேலும் கூரிய நகங்கள் பால் காம்புகளில் கீரல் ஏற்படுத்தி அதன் வழியே நுண்கிருமிகள் உள்ளே சென்று மடிவீக்க நோயை ஏற்படுத்தும். எனவே விரல் நகங்களை அவ்வப்போது வெட்ட வேண்டும். பால் கறப்பதற்கு முன், கைகளை கிருமி நாசினி கொண்டு சுத்தமாக கழுவ வேண்டும். உலர்ந்த சுத்தமான துணியில் கைகளை துடைத்தபின், பால் கறக்க தொடங்க வேண்டும். இவ்வாறு பால் கறவையாளரின் சுகாதாரம் முக்கியத்துவம் பெறுகிறது.

### பால் பாத்திரங்களின் சுகாதாரம்

பால் பாத்திரங்கள் மூலம் தான், அதிகளவு அசுத்தமானது கறந்த பாலில் சேர்கிறது. சரியாக சுத்தம் செய்யாத பாத்திரத்தில் காணப்படும் சிறு பள்ளங்கள் மற்றும் விளிம்புகளில் தேங்கியுள்ள பாலின் மூலம், நுண்கிருமிகள் பெருக்கமடைந்து, பாலின் தரத்தை குறைத்து விடுகிறது.

எனவே பால் கறப்பதற்கும், சேமித்து வைப்பதற்கும், பயன் படுத்தப்படும் பாத்திரங்களில் பள்ளம், விளிம்பு, மடிப்பு இல்லாத ஒரே சீரான அமைப்புடைய எவர்சில்வர் பாத்திரங்களை பயன் படுத்துவது நல்லது. பால் பாத்திரங்கள் மற்றும் பால் கறவை இயந்திரத்தின் பாகங்களை ‘அயோடோஃபோர்‘ காஸ்டிக்சோடா அல்லது கொதிக்க வைத்த தண்ணீரைக் கொண்டு கழுவி, சுத்தமாக பராமரிக்க வேண்டும்.

### சுகாதாரமான பால் கறக்கும் முறைகள்

பால் கறக்கும் போது அமைதியாகவும், விரைவாகவும் அதாவது சுமார் 7 நிமிடங்களுக்குள் மடியிலுள்ள பால் முழுவதையும் கறக்க வேண்டும். இல்லையென்றால், மடியில் மீதமிருக்கும் பாலானது நுண்கிருமிகள் பெருக்கத்திற்கு வழிவகுத்து, மடிநோய் ஏற்பட வாய்ப்புள்ளது. முழு விரல்களினால் காம்பினை பிடித்து, உள்ளங் கையின் மீது அழுத்தி, பால் கறப்பது சிறந்த முறையாகும். கைவிரல் முட்டியினை மடக்கி, பால்கறப்பது எளிதாக இருந்தாலும் காம்பின் மேல்பாகம் பாதிக்கப்பட்டு சிறுகாயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

அக்காயத்தின் மூலம் நுண்கிருமிகள் மடியினுள் சென்று, மடிவீக்க நோய் ஏற்படும். எனவே இம்முறையை தவிர்க்கவும். முதல் 2 சுரப்பு பாலினை கீழே விட்டுவிடவும். ஏனெனில், அவற்றில் பால் காம்பு களில் தங்கியிருக்கும் நுண்கிருமிகளில் அதிகளவு வெளியேறும். இது எஞ்சிய பாலில் கலந்து அசுத்தமடைய வாய்ப்புள்ளது.

பால் கறந்த பின்பு, 'அயோடோஃபோர்' கிருமிநாசினியால் பால் காம்புகளின் முனைகளை நனைத்துவிட வேண்டும். மேலும், பால் கறந்து முடித்தவுடன், கறவை மாடுகளை உடனே படுக்கவிடக் கூடாது. ஏனென்றால், பால் காம்புகளின் துவாரங்கள் 10 நிமிடம் வரை திறந்திருக்கும். அச்சமயத்தில் காம்பு வழியே நோய்கிருமிகள் உள்ளே சென்று, மடிநோயை ஏற்படுத்தும். இதனை தடுக்க, நாம் கறவை மாட்டிற்கு பசும்புற்களையோ, உலர்தீவனத்தையோ கொடுத்து, மாடு படுக்காமல் நிற்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

**கறவை மாடுகளின் சுற்றுப்புற சுகாதாரம்**

கறவை மாடுகளின் கொட்டகையில் போதுமான வெளிச்சம், காற்றோட்டம் இருக்க வேண்டும். தரைகள் வழுக்காமல், சொர சொரப்பாக இருக்க வேண்டும். பால் கறக்கும் இடத்தை, காலை, மாலை இருவேளையும் நன்றாக கழுவி சுத்தமாக வைக்க வேண்டும். வாசைன தரும் தீவனத்தை, பால் கறக்கும் போதோ அல்லது பால்கறப்பதற்கு அரை மணி நேரம் முன்னரோ கொடுக்கக் கூடாது. ஏனெனில் பாலானது எளிதில் வாசனையை கிரகிக்கும் தன்மையுடையது.

மாட்டு தொழுவத்தில், ஈக்கள், உண்ணிகள், கொசுக்கள் போன் றவை இல்லாமல் சுத்தமாக இருக்க வேண்டும். மாட்டுக் கொட்டகை யிலிருந்து, சாணம், சிறுநீர், கழுவிய தண்ணீரை உடனுக்குடன் அகற்றிய பின், கிருமிநாசினியை தெளிக்க வேண்டும்.

முடிவாக, இதுவரை நாம் விவாதித்த சுகாதாரமான அணுகு முறைகளை, நமது பண்ணைகளில் கடைப்பிடிப்பதன் மூலம் தரமான பால் உற்பத்தி செய்து அதன் மூலம் சமூக பொருளாதார முன்னேற்றம் அடைய முடியும் என்பது உறுதி.

இந்த முறைகளை கடைபிடித்துதான் பாருங்களேன்.

தகவல் : **முனைவர் கோ.இராஜராஜன், பேராசிரியர் மற்றும் தலைவர், முனைவர் சி.மணிவண்ணன், முதல்வர், கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத்துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், உடுமலைப்பேட்டை - 642 205, திருப்பூர் மாவட்டம்.**

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# விவசாயிகள் சந்திக்கும் முக்கிய பிரச்சனைகள்



இன்றைய கால கட்டத்தில விவசாயம் செய்வதே பெரும் சவாலாக மாறியுள்ள நிலையில் விவசாயிகள் தினமும் சந்திக்கும் முக்கிய பிரச்சனைகளை பற்றி விரிவாக பார்ப்போம்.

1) காலநிலை மாற்றம்

2) கூலி ஆட்கள் பற்றாக்குறை

3) போதிய நீர்ப்பாசன வசதி இல்லாத நிலை

4) விளைப்பொருட்களுக்கு கட்டுபடியான விலை இல்லாத நிலை

5) கடன் வசதி

**ஏன் இந்த பிரச்சனை சூழல்?**

இன்றைக்கு விவசாயம் லாபமற்ற தொழிலாக வயல்களில் வேலை பார்க்க ஆட்கள் பற்றாக்குறையாக, உற்பத்திக்கேற்ற விலை கிடைக்காமல், கிராமங்களில் வெளியேறும் விவசாயியோடு, அங்கிருந்த விவசாயமும் விடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கடந்த 2001 ஆம் ஆண்டில் தொடங்கி 2011 வரை 8.67 லட்சம் பேர் விவசாயத்தை விட்டு நகரத்திற்கு மாற்று வேலை தேடி சென்றதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. அப்படி 2011,க்குபிறகு தற்போது வரை கணக்கிட்டால், எவ்வளவு உயர்ந்திருக்கும்? விவசாயிகள் வெளியேறுவதால், வயலை விட்டு விவசாயமும் சேர்ந்தே வெளியேறும் நிலை தான் தற்போது நிலவி வருகிறது.

**இதற்கெல்லாம் தீர்வு என்ன?**

1) விவசாயம் ஒரு லாபகரமான தொழிலாக மாற வேண்டும்.

2) இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபட வேண்டும்.

3) இராணுவம் பயிற்சி போன்று கட்டாயம் விவசாயம் பயிற்சி அளிக்க வேண்டும்.

4) விவசாயத்தில் ஈடுபடும் குடும்பங்களுக்கு தனி சலுகை வழங்கிட வேண்டும்.

5) குறைந்த பட்ச ஆதார விலையை கட்டுபடியான விலையாக நிர்ணயிக்க வேண்டும்.

7) திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்க வேண்டும்.

8) நவீன இயந்திரங்களை வேளாண்மையில் புகுத்த வேண்டும்.

9) சொட்டு நீர்ப்பாசனம் தெளிப்பு நீர்ப்பாசனம் போன்ற வற்றை இலவசமாக வழங்க வேண்டும்.

10) காலநிலை மாற்றத்திற்கேற்ப வேளாண் சாகுபடி உத்திகளை கையாள வேண்டும்.

இவ்வாறாக செய்தால் விவசாயம் தலைத்தோங்கும் எதிர்கால சந்ததியினர் உணவு பஞ்சமின்றி நிம்மதியாக வாழலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

## தலைக் கவசம் உயிர்க் கவசம்
## முறையாக தலைக் கவசம் அணிவோம்




ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396

# தென்னை, வாழை மற்றும் அதன் உபப்பொருட்கள் மனித ஆரோக்கியத்தில் ஏற்படுத்தும் தாக்கம் - ஒரு பார்வை

மனித வாழ்க்கை ஆரோக்கியம் மற்றும் உணவுப் பழக்கங்களோடு நெருக்கமாக இணைந்துள்ளது. இந்திய பாரம்பரிய வேளாண் சமூகத்தில் தென்னை மற்றும் வாழை போன்ற பயிர்கள் உணவாக மட்டுமல்லாது, மருந்தாகவும், சுகாதார ஆதாரமாகவும் பயன்பட்டு வருகின்றன. “உணவே மருந்து” என்ற கொள்கைக்கு உயிர்ப்பூட்டும் சிறந்த எடுத்துக்காட்டுகளாக தென்னை மற்றும் வாழை விளங்குகின்றன. இவை மற்றும் அவற்றின் உபப்பொருட்கள் மனித உடலின் பல்வேறு செயல்பாடுகளை மேம்படுத்தி, நோய்கள் வராமல் தடுக்கும் தன்மையைக் கொண்டுள்ளன.

இக்கட்டுரையில் தென்னை, வாழை மற்றும் அவற்றின் உபப்பொருட்கள் மனித ஆரோக்கியத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களை விரிவாக ஆராய்கிறோம்.

**1. தென்னை (Cocos nucifera) – ஆரோக்கியத்தின் முழுமையான ஆதாரம்**

தென்னை மரம் “கற்பக விருட்சம்” என அழைக்கப்படுவதற்குக் காரணம் அதன் ஒவ்வொரு பகுதியும் மனித வாழ்விற்கு பயனுள்ளதாக இருப்பதே. உணவு, மருந்து, எண்ணெய், நார் என அனைத்துத் தளங்களிலும் தென்னை முக்கிய பங்கு வகிக்கிறது.

**1.1 தென்னீர் – இயற்கை ஆரோக்கிய பானம்**

தென்னீர் மனித உடலுக்குத் தேவையான இயற்கை எலக்ட்ரோலைட் பானமாகும். இதில் : பொட்டாசியம், மக்னீசியம், சோடியம் மற்றும் கால்சியம் போன்ற கனிமங்கள் சரியான விகிதத்தில் உள்ளன.

**ஆரோக்கிய நன்மைகள்**

- உடலில் நீரிழப்பு (Dehydration) ஏற்படாமல் பாதுகாக்கிறது
- வெப்பக் காலங்களில் உடல் சூட்டை குறைக்கிறது.

- சிறுநீரக கற்கள் உருவாவதைத் தடுக்கும்
- வயிற்றுப்போக்கு, வாந்தி போன்ற நிலைகளில் உடலைச் சமநிலையில் வைத்திருக்கும்

இயற்கையான IV flui என மருத்துவ ரீதியாகவும் தென்னீர் பாராட்டப்படுகிறது.

**1.2 தேங்காய் – நல்ல கொழுப்பின் களஞ்சியம்**

தேங்காயில் உள்ள கொழுப்புகள் பெரும்பாலும் Medium Chain Triglycerides (MCTs) ஆகும். இவை உடலில் சேமிக்கப் படாமல் உடனடியாக ஆற்றலாக மாற்றப்படுகின்றன.

**ஆரோக்கிய நன்மைகள்**

- உடலுக்கு விரைவான ஆற்றல் வழங்குகிறது
- மூளைச் செயல்பாட்டை மேம்படுத்துகிறது
- நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது
- குடல் இயக்கத்தை சீராக்குகிறது

சரியான அளவில் எடுத்துக்கொள்ளும் போது இதய ஆரோக் கியத்திற்கும் உதவுகிறது.

**1.2 தேங்காய் எண்ணெய் – மருந்தும் உணவுமாக**

தேங்காய் எண்ணெயில் Lauric acid அதிகம் உள்ளது. இது, ஆன்டி–பாக்டீரியல், ஆன்டி–வைரல், ஆன்டி–ஃபங்கல் பண்பு களை கொண்டுள்ளது.

**பயன்கள்**

- சரும நோய்கள், புண்கள் ஆற உதவுகிறது
- முடி வளர்ச்சியை ஊக்குவிக்கிறது
- செரிமானக் கோளாறுகளை குறைக்கிறது
- பாரம்பரிய மருத்துவத்தில் வெளிப்புற மருந்தாகவும் பயன் படுகிறது

**1.4 தென்னை உபப்பொருட்கள் மற்றும் மறைமுக ஆரோக்கிய நன்மைகள்**

- தேங்காய் பால் – ஊட்டச்சத்து நிறைந்தது, சைவ உணவு களுக்கு சிறந்த மாற்று

● தேங்காய் நார் (Coir) – சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மறைமுகமாக மனித ஆரோக்கியத்தை காக்கும்

● தேங்காய் ஓடு – கார்பன், வடிகட்டி பொருட்கள் தயாரிப்பில் பயன்பாடு





**2. வாழை (Musa spp.) – எளிதில் செரிக்கும் ஆரோக்கிய உணவு**

வாழை ஒரு முழுமையான உணவுப் பயிர். பழம் முதல் இலை வரை அனைத்தும் மனித வாழ்விற்கு பயன்படுகிறது.

**2.1 வாழைப்பழம் – உடனடி ஆற்றல் உணவு**

வாழைப்பழத்தில் இயற்கை சர்க்கரை, பொட்டாசியம், வைட்டமின் B6 மற்றும் நார்ச்சத்து அதிகமாக உள்ளது.

**ஆரோக்கிய நன்மைகள்**

● உடனடி ஆற்றல் வழங்கும்

● இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தும்

● இதய துடிப்பை சீராக்கும்

● மன அழுத்தத்தை குறைக்கும்

விளையாட்டு வீரர்களுக்கான சிறந்த உணவாக வாழைப்பழம் கருதப்படுகிறது.

**2.2 பச்சை வாழை – நீரிழிவு நட்பு உணவு**

**பச்சை வாழையில்**

● Resistant starch

● நார்ச்சத்து அதிகம்

**இருப்பதால்**

● இரத்த சர்க்கரை அளவை மெதுவாக உயர்த்தும்

● நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்றது

● குடல் நலத்தை மேம்படுத்தும்

**2.3 வாழைத்தண்டு – சிறுநீரக ஆரோக்கியம்**

வாழைத்தண்டு பாரம்பரிய மருத்துவத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளது.



**நன்மைகள்**

● சிறுநீர் பெருக்கி (Diuretic)

● சிறுநீரக கற்களை கரைக்க உதவும்

● உடல் சூட்டை குறைக்கும்

● நார்ச்சத்து அதிகம்

**2.4 வாழைப்பூ – பெண்கள் ஆரோக்கியத்தின் நண்பன்**

**வாழைப்பூவில்**



● இரும்புச்சத்து

● நார்ச்சத்து

● ஆன்டி–ஆக்ஸிடென்ட்கள்

அதிகம் உள்ளது.

**பயன்கள்**

● இரத்த சோகையை குறைக்கும்

● மாதவிடாய் கோளாறுகளை சரி செய்யும்

● தாய்ப்பால் சுரப்பை மேம்படுத்தும்

**2.5 வாழை இலை – பாரம்பரிய சுகாதார அறிவியல்**

**வாழை இலையில் உணவு பரிமாறுவது**

● ஆன்டி–பாக்டீரியல் தன்மை

● உணவில் நச்சுத் தன்மை குறைப்பு

● செரிமானத்தை மேம்படுத்தும்

இன்றைய அறிவியல் ஆய்வுகளும் இதை உறுதிப்படுத்துகின்றன.

### 3. தென்னை மற்றும் வாழை – ஒருங்கிணைந்த ஆரோக்கிய பங்களிப்பு

தென்னை நல்ல கொழுப்பை வழங்குகிறது; வாழை உடனடி ஆற்றலை வழங்குகிறது.

**இரண்டும் இணைந்து :**

- சமநிலையான ஊட்டச்சத்து
- நோய் எதிர்ப்பு சக்தி
- செரிமான ஆரோக்கியம்

என்ற மூன்றையும் ஒருங்கே வழங்குகின்றன.

### 4. பாரம்பரிய மருத்துவத்தில் பயன்பாடு

சித்தா, ஆயுர்வேதம், நாட்டுமருத்துவம் ஆகியவற்றில் தென்னை எண்ணெய், வாழைப்பூ மற்றும் வாழைத்தண்டு முக்கிய மருந்துப் பொருட்களாகப் பயன்படுகின்றன.

தென்னை மற்றும் வாழை மனித ஆரோக்கியத்திற்கு இயற்கை அளித்த அரிய வரங்கள். இவற்றின் உபப்பொருட்கள் கூட உடல்நலம், மனநலம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன. நவீன வாழ்க்கை முறையில் இந்த பாரம்பரிய உணவுகளை மீண்டும் பயன்படுத்துவது ஆரோக்கிய மான சமூகத்தை உருவாக்க உதவும்.

“பாரம்பரிய உணவுகள் - ஆரோக்கியமான எதிர்காலத்தின் அடித்தளம்”.

தகவல் : **வெங்கடேஷ் ம, நிவேதா,ஆ.ல. உதவிப் பேராசிரி யர்கள் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), ஸ்ரீதேவி ச, நான்காமாண்டு மாணவி, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.**



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# முட்டை அமினோ அமிலம் பற்றி வேளாண் கல்லூரி மாணவர்கள் விளக்கம்




திருச்சி, மார்ச் 7

திருச்சிராப்பள்ளி, சமயபுரத்தில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக் கழகத்தில் வேளாண் அறிவியல் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள் (B3 திருவெறும்பூர்) தங்கள் ஊரக வேளாண்மைப் பணி அனுபவத்தில், வாழவனந்தான் கோட்டையில் முட்டை அமினோ அமிலம் செய்முறை, உபயோகம் மற்றும் அதன் நன்மைகள் குறித்து விவசாயிடம் கூறினார்.

**செய்முறை :**

4-5 பச்சை முட்டைகளை போதுமான எலுமிச்சை சாற்றில் 10-12 நாட்கள் ஊறவைத்து, பின்னர் அதே அளவு வெல்லத்துடன் (250-500 கிராம்) மற்றொரு 10 நாட்கள் கலந்து வடிகட்டவும். 1-3 மில்லி செறிவூட்டப்பட்ட சிபுபு கரைசலை 1 லிட்டர் தண்ணீருடன் கலக்கவும்.

**நன்மைகள் :**

முட்டை அமினோ அமிலம் (EAA) என்பது ஒரு கரிம, ஊட்டச் சத்து நிறைந்த திரவ உரமாகும், இது தாவர வளர்ச்சி, பூக்கும் தன்மை மற்றும் பூச்சி கட்டுப்பாட்டை ஊக்குவிக்கிறது.



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நிலைத்தன்மை கொண்ட வேளாண்மைக்கான பொறியியல் தீர்வுகள் – சர்வதேச மாநாடு

கோயம்புத்தூர், மார்ச் 7

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகதிற்கு உட்பட்ட வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (AEC&RI), கோயம்புத்தூரில், AGRITECH MANIFEST 2026




(ATM' 26) நிகழ்வின் ஒரு பகுதியாக "நிலைத்தன்மை கொண்ட வேளாண்மைக்கான பொறியியல் தீர்வுகள்" என்ற தலைப்பில் சர்வதேச மாநாடு (ICEARF 2026) மார்ச் 09, 2026 அன்று நடைபெற உள்ளது.

இந்த மாநாட்டில் 500-க்கும் மேற்பட்ட மாணவர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள், பேராசிரியர்கள், தொழில்துறை நிபுணர்கள் மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளனர். வேளாண்மையில் நிலைத்தன்மை, காலநிலை மாற்றத்துக்கு தகுந்த முறைகள், தொழில்நுட்ப முன்னேற் றங்கள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு அறிவியல் கருத்தாடல்கள் நடைபெறும்.

மாநாட்டில் பண்ணை இயந்திர மற்றும் சக்தி பொறியியல், மண் மற்றும் நீர் பாதுகாப்பு பொறியியல், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பொறியியல், உணவு செயலாக்க பொறியியல் மற்றும் வேளாண் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகள் குறித்து தொழில்நுட்ப அமர்வுகள் நடைபெறும்.

செயற்கை நுண்ணறிவு (AI), IoT அடிப்படையிலான ஸ்மார்ட் வேளாண்மை, துல்லிய நீர் மேலாண்மை, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாடு மற்றும் நிலைத்த உணவு செயலாக்க முறைகள் போன்ற தலைப்புகள் விவாதிக்கப்படும்.

மேலும், ஆராய்ச்சி கட்டுரைகள் வாய்மொழி வழங்கல்கள் மூலம் முன் வைக்கப்படவுள்ளன. தேசிய மற்றும் சர்வதேச அளவிலான சிறப்பு விருந்தினர் உரைகள், தொழில்நுட்ப கலந்துரையாடல்கள் ஆகியவை மாநாட்டின் சிறப்பம்சங்களாக அமையும். ICEARF 2026 மாநாடு, கல்வி மற்றும் தொழில்துறை இணைப்பை வலுப்படுத்தி, எதிர்கால நிலைத்த வேளாண்மைக்கான புதுமையான பொறியியல் தீர்வுகளை உருவாக்கும் முக்கிய தளமாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.



Rithvik Pipe

IS 4985 : 2021

IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741